<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 150/2012

Deposition of Witness : PW 1

Name : நாகேஸ்வரி (வயது – 62)

Father's Name /W/o : க/பெ சுப்பிரமணி

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : இலுப்பைதண்டலம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 22.10.2025.

## <u>குறுக்கு விசாரணை</u>

1. தாவா தாக்கல் செய்த அனைவரும் சகோதரிகள் என்றால் சரிதான். நான் மற்ற வாதிகளுக்கும் சேர்த்து தான் பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் சகோதரர்கள் என்றால் சரிதான். 2007,2011 ஆம் ஆண்டுகளில் பாகம் பிரிக்கும் போது பங்கு கேட்டேனா என்றால் கேட்டேன். நான் பாகம் கேட்டு பிரதிவாதிகள் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை மனைகளாக பிரித்து விற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. எப்போது மனை பிரிக்கப்பட்டது தெரியவந்தது என்றால் நான் வில்லங்கம் போட்டு பார்த்தேன் அதில் எனக்கு மனைகளாக பிரித்தது தெரியவந்ததா என்றால் இல்லை. நான் என் தாவா 11 ஆவது பத்தியில் தாவா 6,7 ஐட்டம் விற்றுவிற்றார்கள் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். கிரைய பத்திரத்தில் எவ்வளவு மதிப்பு என்று பார்த்தேனா என்றால் ஞாபகமில்லை. என் சகோதரிகளுக்கு சமார் 35 வருடத்திற்கு முன்பே

திருமணம் நடைபெற்று இருக்கும் என்றால் சரிதான்.

3. பதிலுரையில் பிரதிவாதிகள் தாவா சொத்தை மனைகளாக விற்றுவிட்டதாக தெரிவித்துள்ளார்கள் என்றாலும் அதனை படித்து பார்த்தேனா என்றால் தெரிந்து கொண்டேன். என்னிடம் காட்டப்படும் பதிவு செய்யப்படாத விக்கரைய பத்திரம் 13.08.2007 தேதியில் நான் மற்றும் என் சகோதரிகள் கையொப்பம் போட்டுள்ளோமா என்றால் நாங்கள் கையொப்பமிடவில்லை அவர்களே போட்டுகொண்டார்கள்.

4. நாங்கள் அனைவரும் சேர்ந்து கையொப்பமிட்டு தற்போது இல்லை என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். 1 மற்றும் 2 பிரதிவாதிகளிடமிருந்து வாங்கியவர் தான் தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தை வாங்கியவர்களை நான் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சேர்க்கவில்லை.

5. பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 16 இல் 1 மற்றும் 2 ஆவது பிரதிவாதிகள் தான் தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளார்கள் என்றும் நான் அனுபவத்தில் இல்லை என்று தெரிவித்துள்ளேனா என்றால் சரிதான். நான் தாவா தாக்கல் செய்த போது பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்காக தீர்வை ரசீது செலுத்தவில்லை என்றால் தெரியாது. 2007 ஆம் ஆண்டு என் தம்பி குமரேசனுக்கு பொது அதிகாரம் கொடுத்து தான் விற்றார் என்றால் நான் கையொப்பம் போடவில்லை. என் தம்பி குமரேசன் அவர் மனைவிக்கு பொது அதிகாரம் எழுதி கொடுத்தது எனக்கு தெரியுமா என்றால் இல்லை.

6. நான் மொத்த சொத்திற்கு மனைகள் மதிப்பு போட்டு தாவா தாக்கல் செய்யவில்லை என்றால் போடவில்லை. எனவே மேற்படி காரணத்திற்காக இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. எங்களுடைய பாகத்தை வாங்கிகொண்டு மீண்டும் பாகம் கேட்டு தவறுதலாக வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல.

7. தாவா சொத்துக்கள் சுயாஜீதம் அல்லது பூர்வீகமா என்று மொத்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்து தான் பாகமானது மற்றும் பிரதிவாதிகள் சொத்தை விற்றது எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எப்போது தெரியும் என்றால் 4 வருடத்திற்கு முன்பு தான் தெரியும். இந்த வழக்கை 2012 ஆம் ஆண்டில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் தற்போது 4 வருடத்திற்கு முன்பு தான் பிரதிவாதிகள் பாகம் பிரித்தது மற்றும் விற்றது எனக்கு தெரியவந்தது என்று நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.